உள்துறைச் செயலர் பணியிட மாற்றம்: மின் வாரியத் தலைவராக ராஜேஷ் லக்கானி நியமனம்

சென்னை, அக். 9: தமிழக அரசின் உள்துறைச் செயலராகப் பணியாற்றி வந்த கே.மணிவாசன், நில நிர்வாக ஆணையராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

மொத்தம் 9 ஐஏஎஸ் அதிகாரிகளைப் பணியிட மாற்றம் செய்து தலைமைச் செயலர் எம்.சாய்குமார் வெள்ளிக்கிழமை பிறப்பித்த 3 உத்தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நில நிர்வாக ஆணையராக இருந்த ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் ஆகியவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகப் பணியாற்றி வந்த ஏ.கார்த்திக், உள்துறைச் செயலராக நியமிக்கப் பட்டுள்ளார்.

தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும், மேலாண்மை இயக்குநராகவும் பணியாற்றி வந்த வி.அருண்ராய், நிதித் துறை செலவினப் பிரிவு செயலராகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். நிதித் துறை செலவினப் பிரிவு செயலராகப் பணியாற்றி வந்த என். வெங்கடேஷ், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேனி மாவட்ட ஆட்சியர் மாற்றம்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநராகப் பணியாற்றி வந்த வி.சிவ கிருஷ்ண மூர்த்தி, தேனி மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேனி மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றி வந்த ஆர்.வைத்திநாதன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநகராட்சி ஆணையர்கள் மாற்றம்: ஆவடி மாநகராட்சி ஆணையராக பணியாற்றி வந்த ஆர். சரண்யா, தாம்பரம் மாநகராட்சி ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சார் ஆட்சியராக பணியாற்றி வந்த எல்.அம்பிகா ஜெயின், ஆவடி மாநகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராகுல் காந்தி இன்று சென்னை வருகை

முதல்வர் விஜய்யை சந்திக்கிறார்





சென்னை, அக். 9: மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி சனிக்கிழமை(அக்.10) சென்னை வருகிறார். அவர் தமிழக முதல்வரும், தவெக தலைவருமான சி.ஜோசப் விஜய்யை சந்தித்துப் பேசவுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி தில்லியில் இருந்து விமானம் மூலம் சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையத்துக்கு வருகிறார். அவரை தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏ-க்கள் உள்ளிட்டோர் வரவேற்கின்றனர். அவர் ஹோட்டல் தாஜ் கன்னிமாராவில் தங்குகிறார்.

இதற்கான ஏற்பாடுகளை தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், மேலிடப் பொறுப்பாளர் குலாம் அகமதுமிர், அமைச்சர்கள் எஸ்.ராஜேஷ் குமார், பி.விஸ்வநாதன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் கூறியதாவது:

தில்லியிலிருந்து சென்னைக்கு வரும் ராகுல் காந்தி, தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய்யை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசுகிறார். தொடர்ந்து சென்னை தீவுத்திடலில் மாலை 5 மணிக்கு நடைபெறும் மாணவர் குரல் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

அதில், பங்கேற்க தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 1 லட்சம் பேர் வரை பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 10,000 முதல் 20,000 பேர் வரை பதிவு செய்து சான்று பெற்றவர்களை அனுமதிக்கவுள்ளோம்.

கூட்டத்தில் நீட் பிரச்னை, வேலை வாய்ப்பின்மை, மத்திய அரசின் கல்வி முறைகளால் பாதிப்பு மற்றும் கலாசாரம், பெண் கல்வி உள்ளிட்ட முக்கிய பிரச்னைகளைப் பற்றி ராகுல் காந்தி பேசவுள்ளார்.

தற்போது தில்லியில் போராட்டம் நடைபெறுகிறது. ராகுல் காந்தி போராட்டத்தில் பங்கேற்ற நிலையிலும், தேர்வுகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், நாட்டின் வேலைவாய்ப்பின்மை மற்றும் மத்திய பாஜக அரசின் தவறான கல்விக் கொள்கைகள் குறித்து அவர் பேசவுள்ளார்.

கூட்டணி ஆட்சிக்கு கிடைத்த வெற்றி: மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் மக்கள் நல்ல தொரு தீர்ப்பை அளித்துள்ளனர். இரு தொகுதி வெற்றியால் தவெகவின் பலம் கூடியுள்ளது. கூட்டணி அரசுக்கு கிடைத்த வெற்றியாகக் கருதுகிறோம்.

வெற்றிக்காக பிரசாரம் மேற்கொண்ட முதல்வர் சி.ஜோசப் விஜய் மற்றும் அனைத்துக் கூட்டணித் தலைவர்களுக்கும் நன்றி என்றார்.

தமிழக ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம்

சென்னை, அக். 9: தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம் செய்யப்பட்டார்.

தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக இருந்த ஏ.அருண், கடந்த ஜூலை 13-ஆம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இதனால் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநர் பொறுப்பை கூடுதல் பணியாக அந்தத் துறையின் சிறப்புப் புலனாய்வு பிரிவு ஐஜியாக இருக்கும் சி.மகேஸ்வரி கவனித்து வந்தார்.

இந்த நிலையில், தாம்பரம் காவல் ஆணையராக இருந்த ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹாவை, ஊழல் தடுப்புப் பிரிவின் இயக்குநராக நியமித்து தமிழக அரசின் உள்துறை முதன்மைச் செயலர் ஏ.கார்த்திக் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மேலும், அந்த உத்தரவில், தாம்பரம் காவல் ஆணையர் பொறுப்பை கூடுதல் பணியாக சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் ஏ.அமல்ராஜ் கவனிப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக பிரேம் ஆனந்த் சின்ஹா, திங்கள்கிழமை பொறுப்பு ஏற்கிறார்.



பிரேம் ஆனந்த் சின்ஹா.

பிகாரைச் சேர்ந்தவர்: பிகாரை பூர்விகமாகக் கொண்ட பிரேம் ஆனந்த் சின்ஹா, ஐபிஎஸ் தேர்ச்சி பெற்று கடந்த 2001-ஆம் ஆண்டு தமிழக காவல் துறையில் இணைந்தார்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை உதவி காவல் கண்காணிப்பாளராக தமிழக காவல் துறையில் தனது பணியை பிரேம் ஆனந்த் சின்ஹா தொடங்கினார். கடந்த ஜூன் மாதம் தாம்பரம் காவல் ஆணையராக பிரேம் ஆனந்த் சின்ஹா பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

நவீனத்துக்கு முக்கியத்துவம்: தமிழக காவல் துறையை நவீனமயமாக்குவதில் பிரேம் ஆனந்த் சின்ஹாவின் பங்கு முக்கியமானதாகக் கூறப்படுகிறது. தமிழக காவல் துறை தற்போது குற்றவாளிகளை அடையாளம் காண பயன்படுத்தும் முக அடையாள காணும் செயலி, முக அடையாளம் காணும் கேமராக்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை அறிமுகம் செய்ததில் பிரேம் ஆனந்த் சின்ஹா முக்கிய பங்காற்றினார். அதேபோல, கரோனா பொதுமுடக்க காலத்தில் இருந்த இ-பாஸ் திட்டத்தை எளிதாக்கியதிலும் பிரேம் ஆனந்த் சின்ஹாவின் பங்கு உண்டு.

JM Financial

JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை - IV-A பினைய நலன்(அமலாக்க)2002 இன் விதிகள், விதி 9(1) (விதி 8(6) காண்க),

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பினைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை மின்னணு ஏலவிற்பனைமின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (முதுகீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் வசூலீடாக செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்ச்சியாக JMFARC-விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) **EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust** ("பினையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகள் திரும்பப் பெறத் தொகுதியுடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவனித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

ஏ எண்	கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, டேவனித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன்/ மொத்த நிலுவைத் தொகை
1.	கடன்தாரர் திருமதி நூரைஷா S, C/o திரு/திருமதி சேட் இணை கடன்தார் : 2. திரு/திருமதி செட் S, C/o திரு ஷாஹுல்ஹமீத் **இருவரின் முகவரி** எண் 75 A, ஒண்டிக்குப்பம், 4வது தெரு, திருவொற்றியூர், திருவள்ளூர், தமிழ்நாடு, 600019	திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, விச்சூர் கிராமம், பூபாலன் நகரில் அமைந்துள்ள, பட்டா சர்வே எண் 56/32-இன் படி சர்வே எண் 56/4-இல் அடங்கிய, மனை எண் 42-ஐக் கொண்ட 2265 சதுர அடி பரப்பளவுள்ள நிலப்பகுதி மற்றும் இதன் எல்லைகள்: (வடக்கில்)- மனை எண் 25 (தெற்கில்)- 24 அடி சாலை (கிழக்கில்)- மனை எண் 43 (மேற்கில்)- மனை எண் 41.	ரூ.6,50,000/- ரூ.65,000/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SETRVTR0331472 / 700002638830 15.09.2026 அன்றுள்ளபடி மதிப்பிடப்பட்ட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.18,44,733/- மேலும் 16.09.2026 அன்று முதல் பாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற.

விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: சதீஷ் 9940286237,கார்த்திக் குமார் A 8939729580, குரூஸ் R 9884393075 & பிரசாந்த் மொண்டே - 022-62241676

கடன் வழங்கியவரான வங்கிக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்கள்: ஏதும் இல்லை

மின் ஏலத் தேதி & நேரம்: 28.10.2026 நேரம்: காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் - 18.10.2026 முதல் 23.10.2026 வரை - காலை10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை

EMD உடன் ஆன்லைன் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி: 26.10.2026

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No. 18, Bazulla Road,T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 26.10.2026 அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளை பின்வரும் வலைத்தளங்களில் காணலாம், https://www.jmfinancialarc.com/Home/RetailAssets & https://www.bankeauctions.com.

தேதி: 10.10.2026
இடம்: மும்பை

ஒப்பம்/அதிகாரபூர்வ அதிகாரி
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

Punjab & Sind Bank
(A Govt. of India Undertaking)
Where service is a way of life

கிளை: அசோக் நகர், கிளை குறியீடு: c0999
17/36 4வது அவென்யூ, தரைதளம், அசோக் நகர், சென்னை-600083. போன்:044-24715560, மின்னஞ்சல் : c0999@psb.bank.in

[பிற்சேர்க்கை-IV-A] அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், மற்றும் உரிமை அமலாக்கச் சட்டம் 2002, விதி 6(2) இன் கீழ் அசையும் சொத்துக்கள் மற்றும் 8(6) இன் கீழ் அசையாச் சொத்துக்களை விற்பனை அறிவிப்பு. இந்த அறிவிப்பு, சட்டபூர்வமான பினைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ஆண்டு விதி 8(6)ன் கீழ் கடன்தார்கள் மற்றும் ஜாமீன்தார்கள் 15 நாட்கள் சட்டபூர்வ விற்பனை அறிவிப்பாகும்.

இதன் மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தார்கள், அடமானதார்கள் மற்றும் ஜாமின்தார்கள் ஆகியோருக்கு கடன் அளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடையாளபூர்வ சுவாதீனம் எடுத்தது தொடர்பு கீழே குறிப்பிட்ட கடன் கணக்கிலிருந்து மீட்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை வருவிக்கும் பொருட்டு இந்த சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்கப்படும் என்று இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது. கடன்தார்(கள்)/ அடமானதார்(கள்)/ ஜாமின்தார்(கள்) விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்தபட்ச கேப்பு விலை, பின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல உயர்வு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார் மற்றும் ஜாமீன்தார்கள் பெயர் மற்றும் முகவரி: 1. திருமதி. பத்மினி J, (கடன்தார்) எண்.9, வெங்கடேசபுரம், 5வது தெரு, கன்னிகாபுரம், பெரும்பூர் கிராமம், சென்னை-12, 2. செல்வி. அனிதா ஜெபசீலி (இணை கடன்தார்) எண்.9, வெங்கடேசபுரம், 5வது தெரு, கன்னிகாபுரம், பெரும்பூர் கிராமம், சென்னை-12, 3. திரு. ரஜினிகாந்த் (ஜாமீன்தார்) எண்.9, வெங்கடேசபுரம், 5வது தெரு, கன்னிகாபுரம், பெரும்பூர் கிராமம், சென்னை-12.

பிரிவு 13 (2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை: தேதி: 16.08.2019, தொகை: ரூ.6,78,555.29/-

நிலுவை தொகை : 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.11,45,604.37;

சுவாதீன நிலை: அடையாளபூர்வ சுவாதீனம்.

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் புரசைவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பெரம்பூர் வட்டம், சர்வே எண்.128/82 இல் அடங்கிய வெங்கடேசபுரம் 5வது தெருவில் அமைந்துள்ள கதவு எண்.9 இன் விஸ்தீரணம் 368 3/4 சதுர அடி நிலம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், வடக்கில் வெங்கடேசபுரம் 5வது தெரு, தெற்கில் சர்வே எண்.128/2, இல் உள்ள திரு. கிஷோர்குமார் அவரின் உரிமைப் பெற்ற சொத்து, கிழக்கில் சர்வே எண்.128/82 இல் உள்ள திரு. வேதநாயகம் மற்றும் பிரதாஸ் ஆகியோரின் உரிமைப்பெற்ற சொத்து, மேற்கில் சர்வே எண்.128/81 இல் உள்ள திருநதி. எஸ்தர் அம்மாள் அவரின் உரிமைப்பெற்ற சொத்து.

குறைந்தபட்ச கேப்பு விலை ₹ 24.16 இலட்சம் | டேவணித் தொகை ₹ 2,41,600/- | ஏல உயர்வு தொகை ₹ 0.50 இலட்சம்

மின் ஏல தேதி மற்றும் நேரம் 30.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4 மணி வரை

டேவணித் தொகை சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம்	28.10.2026 அன்று பிற்பகல் 3 மணி வரை
சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்	26.10.2026 அன்று காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை

மேலும் இந்த அறிவிப்பு, சட்டபூர்வமான பினைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ஆண்டு விதி 8(6) ன் கீழ் கடன்தார் மற்றும் ஜாமீன்தார்களுக்கான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பாகும்.

பினைய கடன் வழங்கியவருக்கு தெரிந்தவரை வில்லங்கள் : ஏதுமில்லை

*எவ்வாறாயினும், ஏலதாரர்கள் தங்கள் ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன், ஏலத்தில் விடப்பட்ட சொத்துக்கள்/ஏலங்கள் மற்றும் உரிமைகோரல்கள்/உரிமைகள்/ நிலுவைத் தொகைகள்/ சொத்துக்களை ஆகியவை குறித்து தாங்களே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆன்லைன் மின்ஏலம் வழங்கப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் https://ebkray.in or https://baanknet.com/ தளம் மூலம் நடத்தப்படும், ஏதேனும் சந்தேகங்களுக்கு **8291220220** & மின்னஞ்சல்: support.ebkray @psballiance.com / support.BAANKNET@psballiance.com தொடர்பு கொள்ளவும். மேலும் விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை, https://ebkray.in or https://baanknet.com/ மற்றும் https://punjabandsind.bank.in/ இல் காணலாம். மேலும் விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **9991602666** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இடம்: சென்னை; நாள்: 05.10.2023 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் & சிந்து வங்கி

கனரா வங்கி Canara Bank
भारत सरकार का उपक्रम | A Government of India Undertaking | Syndicate

சென்னை சிறப்பு ARM கிளை (02361)
எண்.524, 8வது தளம், கனரா டவர்ஸ், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
போன் : 2849 6339 / 6900
e-mail id cb2361@canarabank.com
Website: www.canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண். 8 (6)-ன் பிரிவு நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தார்கள் மற்றும் ஜாமீன்தார்களுக்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பின் மூலம் அறிவிப்பது யாதெனில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடு செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கியின் **சென்னை சிறப்பு ARM கிளை(02361)**-கிளையின் அதிகாரபூர்வ அதிகாரியால் **ஆக்கபூர்வ சுவாதீனம்** செய்யப்பட்ட சொத்துக்களை கனரா வங்கி, **சென்னை சிறப்பு ARM கிளை(02361)**-க்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் பாக்கித் தொகையினை கடன்தார் மற்றும் ஜாமீன்தார்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு வழங்கப்படுகிறது.

வ.எண்.1: கிளை: சென்னை சிறப்பு ARM கிளை (02361)

கடன்தார்ர் / ஜாமீன்தார் / அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி: M/s. ஜூடு இன்ஃப்ரா டெக்னாலாஜிஸ் பிரைவேட் லிமிடெட், பழைய எண்.43, புதிய எண்.128, அப்பு தெரு, சாந்தோம், மயிலாப்பூர், சென்னை - 600 004. **திரு.HJ. ஜூடு அருள்தால்,** த/பெ. ஹூபெர்ட் ஜோசப், **திருமதி. நிருபா ஜூடு,** க/பெ. திரு. ஜூட் அருள்தால் **இருவரின் முகவரி :** எண்.24, ராஜா இல்லம், ஜோனகன் தெரு, R.A. புரம், சென்னை - 600 028., **மொத்த நிலுவை தொகை: 07.10.2026 அன்று வரை ரூ.10,73,25,806.77 (ரூபாய் பத்து கோடியே எழுபத்து மூன்று லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று ஆறு மற்றும் பைசா எழுபத்து ஏழு மட்டும்)** மேலும் வட்டி மற்றும் அதற்குண்டான வங்கியால் ஏற்படும் பிற கட்டணங்கள் உட்பட.

அசையா சொத்துக்களின் விவரங்கள் : **சொத்து எண்.1 : திரு.HJ. ஜூடு அருள்தால் அவர்கள் பெயரில் உள்ள சொத்து :** மத்திய சென்னை பதிவு மாவட்டம், மயிலாப்பூர் துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பிளாக் எண்.58, மயிலாப்பூர் கிராமம், பழைய கதவு எண்.48, புதிய கதவு எண்.128, அப்பு தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004 என்ற முகவரியில் பழைய சர்வே எண்.782, மறு சர்வே எண்.2846-ன்படி **1965 சதுர அடி** நிலத்தில் 491 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் **912 சதுர அடி** (பொது ஏரியா உட்பட) பிளாட் ஏரியா கொண்ட பிளாட் எண்.S1. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். **எல்லைகள் :** வடக்கில் : மறு சர்வே எண்.2845ன்படி உள்ள சொத்து, தெற்கில் : மறு சர்வே எண்.2849/1, 2849/2, 2849/3ன்படி சம்பந்தம் அவர்களின் சொத்து, கிழக்கில் : அப்பு தெரு, மேற்கில் : மறு சர்வே எண்.2844 & 2847 உள்ள சொத்து.

குறைந்த பட்ச விலை : ரூ.1,08,50,000/- | டேவணித்தொகை : ரூ.10,85,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

சொத்து எண்.2 : திரு. HJ. ஜூடு அருள்தால் அவர்கள் பெயரில் உள்ள சொத்து : மத்திய சென்னை பதிவு மாவட்டம், மயிலாப்பூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட பிளாக் எண்.99, C.C. எண்.818, மயிலாப்பூர் கிராமம், பழைய கதவு எண்.4, புதிய கதவு எண்.26, ஜோனகன் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028 என்ற முகவரியில் பழைய சர்வே எண்.718 மற்றும் 719, மறு சர்வே எண்.4502, மறு சர்வே எண்.4502/1என்படி மொத்தமுள்ள **2813 சதுர அடி அல்லது 1 கிரவுண்டு மற்றும் 413 சதுர அடி** நிலத்தில் **593 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 1வது தளத்தில் **1310 சதுர அடி** பிளாட் ஏரியா கொண்ட பிளாட் எண்.F-2. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். **எல்லைகள் :** வடக்கில் : துணசாமி நாயக்கர் அவர்களின் வீடு, தெற்கில் : ஜோனகன் தெரு, கிழக்கில் : முரளி மற்றும் ஆம்ரோஸ் ஆகியோர்களின் வீடு, மேற்கில் : மரியா சவரியம்மாள் அவர்களின் வீடு.

குறைந்த பட்ச விலை : ரூ.1,28,00,000/- | டேவணித்தொகை : ரூ.12,80,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

வ.எண்.2: கிளை: சென்னை சிறப்பு ARM கிளை (02361)

கடன்தார்ர் / ஜாமீன்தார் / அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி: M/s. தாமரைசெல்வி ஹை டெக் ரைஸ் மில் (கடன்தார்) உரிமையாளர்: திரு.P.கிருஷ்ணன், எண்.21/1A, கரிம்பேடு கிராமம், பள்ளிப்பட்டு - நகரி சாலை, பள்ளிப்பட்டு பஞ்சாயத்து யூனியன், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு - 631 207 **மேலும்:** எண்.7, கரிம்பேடு கிராமம், பள்ளிப்பட்டு - நகரி சாலை, பள்ளிப்பட்டு பஞ்சாயத்து யூனியன், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு - 631 207, **திரு.P.கிருஷ்ணன்** (உரிமையாளர் & ஜாமீன்தார்) த/பெ. A.பொன்னம்பலம், **திருமதி.K.தாமரைசெல்வி (ஜாமீன்தார்)** க/பெ. திரு.P.கிருஷ்ணன், **மற்றும் திரு.K.ரத்தினகுமார் (ஜாமீன்தார்)** த/பெ. திரு.P.கிருஷ்ணன், **அனைவரின் முகவரி:** 5-3-38, பிரதான சாலை, ஏகம்பாதபுரம், நகரி, சித்தூர், ஆந்திர பிரதேசம் - 517 592, **மொத்த நிலுவை தொகை: 30.09.2026 அன்று வரை ரூ.18,12,01,056.80 (ரூபாய் பதினெட்டு கோடியே பன்னிரெண்டு லட்சத்து ஒராயிரத்து ஐம்பத்து ஆறு மற்றும் பைசா எண்பது மட்டும்)** மேலும் வட்டி மற்றும் அதற்குண்டான வங்கியால் ஏற்படும் பிற கட்டணங்கள் உட்பட.

குறைந்த பட்ச விலை : ரூ.4,33,31,000/- | டேவணித்தொகை : ரூ.43,33,100/- | ஏல உயர்வு தொகை : ரூ.50,000/-

(CERSAI ID: 400033193072) சொத்து எண்.4: திரு.P.கிருஷ்ணன் அவர்கள் பெயரில் உள்ள சொத்து.
வகை எண்.1: புட்டூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட புட்டூர் மண்டல், சித்தூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம், எண்.79, குமாரபொம்மராஜுபுரம் கிராம கணக்கு, தரிசு சர்வே எண்.133/1-ன்படி **மொத்தமுள்ள 2.07 ஏக்கர் அல்லது 230 சதுர யார்டு-ல் 4.75 சென்ட்.** மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் **எல்லைகள்:** வடக்கில்: கலுவா (வாய்க்கால்) தெற்கில் : K.வெங்கட்டராஜூ அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில் : K.ராமகிருஷ்ணராஜூ அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : K.வெங்கட்டராஜூ அவர்களுக்கு சொந்தமான நிலம்.
வகை எண்.2: ஸ்ரீபாலாஜி பதிவு மாவட்டம், புட்டூர் துணைபதிவு மாவட்டத்திற்குட்பட்ட புட்டூர் பண்டல், சித்தூர் மாவட்டம், ஆந்திர